Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

06.02.2021

**சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில்
சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி**

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் “தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகம் திருவண்ணாமலை மண்டலத்தின் சார்பாக 32 -ஆவது தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி” நடைபெற்றது.

கல்லூரியின் தலைவர் **ஜி.புல்லையா** அவர்களின் வாழ்த்துதலோடு நடைபெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** தலைமை தாங்கினார். பொருளாளர் **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வட்டாரப் போக்குவரத்து அலுவலர் **ஜி.அருணாசலம்** வழிகாட்டுதலோடு வட்டாரப் போக்குவரத்து முதன்மை ஆய்வாளர் **ஆர்.பெரியசாமி** சிறப்புரையாற்றினார். ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் **கே.கோவிந்தராஜ்** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வட்டாரப் போக்குவரத்து முதன்மை ஆய்வாளர் **ஆர்.பெரியசாமி** தனது உரையில் போக்குவரத்து விதிமுறைகள் குறித்தும் பாதுகாப்புடன் வாகனங்கள் இயக்குவது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். விபத்தில்லாமல் வாகனங்களை இயக்கிய ஓட்டுநர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சாலை விதிகள் குறித்து பதிலளித்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்லூரியின் போக்குவரத்து மேலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், திருவண்ணாமலை மாவட்ட ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியின் உரிமையாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள், கல்லூரியின் பேருந்து ஓட்டுநர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


தமிழ்நாடு அரசு
போக்குவரத்துத் துறை
32வது தேசிய சாலை பாதுகாப்பு மாதம்



தமிழ்நாடு அரசு
போக்குவரத்துத் துறை
32வது தேசிய சாலை பாதுகாப்பு மாதம்
நாள்: 18.01.2021 முதல் 17.02.2021 வரை
சாலை பாதுகாப்பு - உயிர் பாதுகாப்பு!!
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்,திருவண்ணாமலை.
திருவண்ணாமலை.